## சென்னை மெட்ரோ ரெயிலில்

# ஒரே நாளில் 1.37 லட்சம் பேர் பயணம்

சென்னை, அக்.13–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை பொதுமக்களுக்கு, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ரெயில் சேவைகளை எப்போதுமே சரியான நேரத்தில் இயக்கி வருகிறது. ஒரு பாதை என்று மட்டும் இல்லாமல் அனைத்து பாதைகளிலும் மெட்ரோ ரெயில் சேவைகள் சிறந்த முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த 11–ந்தேதி எந்த இடையூறும் இல்லாமல் ரெயில் சேவை நடந்தது. அன்று ஒரு நாள் மட்டும் அதிகபட்சமாக 1 லட்சத்து 37 ஆயிரத்து 820 பயணிகள் பயணம் செய்தனர். அக்டோபர் மாதத்தில் அதிகம் பேர் பயணம் செய்தது இதுவே ஆகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.